# ‘கோவிட்-19’ வாடகை நிவாரண உதவித் தொகைகள்

கேள்விகளும் பதில்களும்

Information in Tamil

## வாடகை நிவாரண உதவித்தொகை என்பது என்ன?

வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கு வாடகை ஒத்தாசை உதவி அளிப்பதற்காக விக்டோரிய மாநில அரசாங்கம் 80 மில்லியன் டாலர் நிதி வசதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ‘கொரோனா வைரஸ் (கோவிட்-19)’ பெருந்தொற்றின் காரணமாக வருமானத்தை இழந்திருக்கும் விக்டோரிய மாநில வாசிகளுக்கு இந்த நிதியுதவி கிடைக்கும். தமது வாடகைப் பணத்தைச் செலுத்துவதற்குச் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் விக்டோரிய மாநில வாசிகள் 3,000 டாலர்கள் வரைக்குமான உதவித் தொகைக்குத் தகுதி பெறக்கூடும்.

### இந்த ‘வாடகை நிவாரண உதவித் தொகை’க்கு யார் தகுதி பெறுவர்?

இந்த உதவித் தொகைக்குத் தகுதி பெற:

- வாடகைக் குறைப்பு ஒப்பந்தம் ஒன்றினை நீங்கள் உங்களுடைய வீட்டு உரிமையாளருடன் ஏற்படுத்திக்கொண்டு, புதிய வாடகை ஒப்பந்தத்தை ‘விக்டோரிய மாநில நுகர்வோர் விவகாரங்கள்’ (Consumer Affairs Victoria)- உடன் பதிவு செய்துகொள்ளவேண்டும். உங்களுடைய வீட்டு உரிமையாளருடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதில் உங்களுக்குச் சிரமம் இருந்தால், ‘விக்டோரிய மாநில நுகர்வோர் விவகாரங்கள்’ (Consumer Affairs Victoria)- இடமிருந்து நீங்கள் உதவி நாடலாம்.

- உங்களுடைய வருமானம் வாரத்திற்கு 1,903 டாலர்களுக்குக் குறைவாக இருக்கவேண்டும்

- மற்றும் உங்களுடைய சேமிப்பில் 10,000 டாலருக்குக் குறைவாக இருக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கு பிரசாவுரிமை அல்லது நிரந்தர வசிப்புத் தேவைப்பாடுகள் எதுவும் கிடையாது.

### உதவித் தொகைக்காக நான் விண்ணப்பிப்பது எப்படி?

உங்களுடைய புதிய வாடகை ஒப்பந்தத்தினை ‘விக்டோரிய மாநில நுகர்வோர் விவகாரங்கள்’ (Consumer Affairs Victoria)- உடன் நீங்கள் பதிவு செய்திருந்தால், இணைய வழியாக, <https://rentrelief.covid19.dhhs.vic.gov.au/> மூலம் ‘வாடகை நிவாரண உதவித் தொகை’க்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

**இந்த உதவித் தொகையினை எதற்காகப் பயன்படுத்தலாம்?**

உங்களுடைய உதவித் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தால், இந்தக் கொடுப்பனவு உங்களுடைய வீட்டு உரிமையாளருடைய வங்கிக் கணக்கில், உங்களுடைய புதிய வாடகை ஒப்பந்தப்படியான வாடகைக்காகச் செலுத்தப்படும்.

**மேலதிகத் தகவல்களை எங்கு காணலாம்?**

“‘கோவிட்-19’ வாடகை நிவாரண உதவித் தொகைகள்’ குறித்த மிகச் சமீபத்தியத் தகவல்களுக்கு
<https://www.housing.vic.gov.au/help-renting/rentrelief> எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய புதிய வாடகை ஒப்பந்தத்தைப் பதிவு செய்துகொள்ள, அல்லது ‘விக்டோரிய மாநில நுகர்வோர் விவகாரங்கள்’ (Consumer Affairs Victoria)- இடமிருந்து உதவி நாட
<https://www.consumer.vic.gov.au/resources-and-tools/advice-in-a-disaster/coronavirus-covid19-and-your-rights/renting-rules-and-support-during-the-moratorium> எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்

மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் எவற்றைக் குறித்தாவது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், 131 450-இல் ‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை’-(Translating and Interpreting Service (TIS National))யினை அழையுங்கள்.

விக்டோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne -இனால் அதிகாரம் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

© விக்டோரிய மாநிலம், ஆஸ்திரேலியா, ‘சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் திணைக்களம்’ (Department of Health and Human Services), செப்டம்பர் 2020.